மூதூர் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 16 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 17 ஆம் திகதி தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மூதூர் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 11,139,745 தொகையான முற்பண மீதி தொடர்பான முற்பணப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | விடயங்கள் |
|---|---|---|
| (m) | 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம்; X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (M) | மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம் பிரிவு 203 | ஆண்டு தோறும் சகல வாகனங்களுக்கும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்படுதல் வேண்டும். எனினும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 09 வாகனங்களுக்கு வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 103,812 ஆக இருந்ததுடன் அதற்கு முன்னைய ஆண்டின் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 6,432,080 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 6,328,268 பின்னடைவைக் சுட்டிக்காட்டுகின்றது. இதற்கான காரணம் வாடகை வருமானம் ரூபா 3,871,917 மற்றும் ஏனைய வருமானம் ரூபா 1,181,517 தொகையால் குறைவடைந்தமை ஆகும்.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2017.12.31 இல் நிலுவை | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2016.12.31 இல் நிலுவை |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகள் | 806 | 816 | 460 | 346 | 786 | 786 | 727 | 58 |
| வாடகை | 11,960 | 9,477 | 11,057 | 902 | 15,236 | 13,349 | 9,660 | 5,575 |
| அனுமதி பத்திர கட்டணம் | 1,075 | 1,398 | 1,043 | 32 | 816 | 786 | 811 | 4 |
| ஏனையவை | 13,334 | 9,367 | 9,367 | 3,966 | 12,415 | 8,707 | 8,707 | 3,708 |

#### 2.2.2 வீதவரிகள்

1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 1984 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 5,679,761 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 சந்தைக்கடை வாடகை வருமானம்

புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 22,820,738 கிரயத்திற்கு 2013 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட 40 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதியை 2014 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கியமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 173 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்டே கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய 40 கடைகளில் 33 கடைகளுக்கே உடன்படிக்கை செய்யப்பட்டு குத்தகைக் காலம் குறிப்பிடப்படாமல் நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) வழங்கப்பட்ட கடைகள் தொடர்பாக 2014 சனவரி 01 தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2017 திசெம்பர் 31 வரை அறவிட வேண்டிய ரூபா 1,248,750 பெறுமதியான வாடகைப்பணத்தை அறவிட சபை நடைவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 இறைச்சிக் கடை குத்தகை வருமானம்

இறைச்சிக்கடை குத்தகையாளர்கள் குத்தகையை செலுத்தத் தவறும் போதே அவர்களது பாதுகாப்பு வைப்பிலிருந்து குத்தகைத் தொகையை அறவிடாமல் வருட இறுதியிலே இந்நடைமுறை பின்பற்றப்படுவதனால் ரூபா 8,303,154 தொகையான நிலுவை அறவிடப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது. மேலும் இந்நிலுவைகளுக்கு சபையினால் காலப்பகுப்பாய்வை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

அ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையினால் நாளொன்றுக்கு சராசரியாக சேகரிக்கப்படும் 4தொன் திண்மக் கழிவுகள் வகைப்படுத்தப்படாது ஆற்றுப்பகுதிக்கு அருகில் உள்ள தனியார் காணி ஒன்றில் கொட்டப்பட்டுவருகின்றமையால் சூழல் பிரச்சினைகள் ஏற்பட சந்தர்ப்பமாக அமைகின்றது.

ஆ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

யுனிசெப் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2012 ஆகஸ்ட் 22 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்ட Sewerage Treatment Plant கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்றுவரை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாததால் சபையின் எல்லைக்குள் சேகரிக்கப்படும் மலக்கழிவுகள் குப்பை கொட்டுமிடத்தில் கொட்டப்பட்டு வருகின்றமை #oy; மாசடைவதற்கு காரணமாக அமைகின்றது.

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குச் சட்டத்தின் பிரகாரம் அதன் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை சபையினால் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. மேலும் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக பொருத்தமான அறிவினை கொண்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட 12 மோட்டார் வாகனங்கள் 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ,லங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6, மற்றும் 4 ஆம் பிரிவிற்கு அமைய 03 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 108,620 தொகையான கடன் கடந்த 09 ஆண்டுகளாக அறவீடு செய்யப்படாது நிலுவையாகக் காணப்படுகின்றன.

(இ) ஒரு செயற்பாடற்ற வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 55,351 மீதி 10 வருடங்களாக காணப்பட்ட போதிலும் அக்கணக்கினை வருமானம் உழைக்கக்கூடிய வகையில் மாற்றுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 20 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) யுனிசெப் நிறுவன நிதி உதவித்திட்டத்தின் கீழ் சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேறிய 200 பயனாளிகளுக்கு நீர் இணைப்பு வசதிகளை வழங்குவதற்கு ரூபா 756,311 தொகை 2016

திசெம்பர் 25 ஆந் திகதி செலுத்தப்பட்ட போதிலும் 17 பயனாளிகளுக்கான நீர் இணைப்புக்கள் இன்றுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான மூதூர் மற்றும் மல்லிகைத்தீவு நூலகங்களில் க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்கள் பயன்படுத்துவதற்கான புதிய பாடத்திட்டங்கள் உள்ளடங்கிய புத்தகங்கள் காணப்படாமையினால் மாணவர்களின் நூலகப் பயன்பாடு குறைவாகக் காணப்படுவதுடன் அவர்களால் நூலகத்தின் மூலம் வினைத்திறனான சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

(ஊ) புறநெகும செயற்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சம்பூர் பிரதேசத்தில் ரூபா 4,094,702 பெறுமதியில் அமைக்கப்பட்ட தாய் சேய் பராமரிப்பு நிலையம் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது சனசமூக நிலைய பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தது.

(எ) மாகாண நிதி ஒழுங்கு விதி இல 163.3 இன் பிரகாரம் செலுத்தப்பட்ட முற்பணங்கள் அனைத்தும் 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 01 தொடக்கம் 04 வருடங்கள் பழமை வாய்ந்த ரூபா 17,018,175 பெறுமதியான முற்பணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 சொத்து முகாமைத்துவம்

3.3.1 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான இரண்டு உழவு இயந்திரங்கள் மற்றும் Pickup வாகனங்கள் திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்பட்டிருந்தும் 02 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது அவற்றை ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(M) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 1,115,226 தொகையான எரிவாயு (Bio Gas) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கட்டடம் 2016 திசெம்பர் 07 ஆம் திகதி ஒப்பந்தகாரரால் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தும் இன்றுவரை அத்திட்டம் செயற்படுத்தப்படாமையால் கட்டிடம் விளைவற்றுக் காணப்படுகின்றது.

3.4 பெறுகை நடைமுறைகள்

3.4.1 பெறுகைத் திட்டம்

தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.4.2 ஒப்பந்த நிர்வாகம்

அ) வள்ளிக்கேணி பிரதான வீதிக்கு கிரவல் இடுதல்

சபை நிதியைப் பயன்படுத்தி வள்ளிக்கேணி பிரதான வீதிக்கு கிரவல் இடுவதற்கான ஒப்பந்தம் ரூபா 1,926,960 தொகைக்கு வளர்மதி சனசமூக நிலையத்திற்கு 2017 ஒக்தோபர் 30 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இவ்வேலை ஒப்பந்தத்தின் பிரகாரம் 2017 திசெம்பர் 30 ஆம் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபையிடம் கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 20 வரை ரூபா 354,207 தொகைக்கு மக்கி (Mucky) மாத்திரமே இடப்பட்டு இருந்தது. மேலும் சபை சரியான தகைமையுடைய ஒப்பந்தக்காரரை ஆரம்பத்திலேயே தெரிவு செய்து ஒப்பந்தத்தை வழங்காது ஒரு சனசமூக நிலையத்திற்கு வழங்கியமையால் இவ் ஒப்பந்தத்தை இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

ஆ) விளையாட்டு மைதான நிர்மாணம்.

புறநெகும செயற்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 6,315,957 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு கடற்கரைச்சேனை விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்பட்ட போது இம் மைதானத்திற்கான காணியின் ஒரு பகுதி தனியாருக்கு உரியது என்ற காரணத்தினால் ரூபா 5,299,394 பெறுமதியான வேலையுடன் நிறைவுறுத்தப்பட்டது. இதனால் கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 20 ஆம் திகதி வரை இவ்விளையாட்டு மைதானம் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 3 % தொடக்கம் 90% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல். |
| | ii. சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) ஒப்பந்த முகாமைத்துவம் | i. ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படுதல். |
| | ii. சன சமூக நிலையங்களுக்கு ஒப்பந்தம் வழங்கும் போது நிதி ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் பின்பற்றப்படுதல். |